# Evil and Suffering: A Review Based on Sociology of Religion

**Dr. S.M. Ayoob,**

Head/ Department of Sociology, Senior Lecturer in Sociology, South Eastern University of Sri Lanka,

ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com, 0094769643899,

**Abstract**

Most of the religions emphasized and gave precise explanations on why evil and sufferings are existed and could be seen in the world though the God (the creator) is merciful. This explanatory research was conducted in order to find out the explanations of different religions about evil and sufferings. This review article is based on secondary source of information. Semitic religions (Judaism, Christianity and Islam) and Indian origin religions provide different views on why evil and sufferings occur in this world though they have praised about the illimitable grace of the god. The Semitic religions emphasized that through the evil and sufferings, god destined to offer good things to human beings. On the other hand, Indian origin religions emphasized that human beings suffer due to their Karma.

**Key Words:** Evil, Suffering, Freedom to will

**அறிமுகம்**

துன்பங்கள் வாழ்க்கையை எரித்துக் கொண்டிருக்கும் காரணியாக அமைவதனால் பெரும்பாலான சமயங்கள் அவற்றை கவனமாக நோக்குவதுடன், பிரச்சனையாகவும் பார்க்கின்றன. இந்திய மரபில் தோற்றம் பெற்ற சமயங்கள் வாழ்வியல் துன்பங்களை நடைமுறை ரீதியான செயலாகவே நோக்குகின்றன. துன்பங்கள் பாரிய சுமைகளாக இருப்பதால் அவற்றை அழித்தொழிக்கும் வழிமுறைகளையும் அத்துன்பங்கள் தோற்றம் பெறக் காரணிகளாக அமைந்த பின்னணிகளையும் இச்சமயங்களில் சுட்டிக்காட்டுகின்றன.

இதற்கு மாற்றமாக செமட்டிய சமயங்கள் (யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம்) இத்தகைய துன்பங்களை (அதிகமாகவோ குறைவாகவோ) கோட்பாட்டு ரீதியாகவே அணுகுகின்றன. மனித வாழ்வில் ஏற்படும் துன்பங்களையும் அதற்கான காரணங்களையும் இச்சமயங்கள் விளக்கின்றன. இவ்வுலகம் எல்லாம் வல்ல, இரக்கமுள்ள இறைவனால் படைத்து பரிபாலிக்கப்படுகின்றதுபோது துன்பங்கள் ஏன் தோற்றம் பெறுகின்றன என்பதனை மையப்படுத்தியே செமட்டிய சமயங்கள் விளக்கமளிக்கின்றன. பார்சி சமயத்தில் (Zoroastrianism) கூட இத்தகைய விளக்கங்களே துன்பங்கள் தொடர்பாக கொடுக்கப்படுகின்றது.

துன்பங்கள் தொடர்பாக எல்லா சமயங்களும் வித்தியாசமான கருத்துகளை கொண்டிருந்த போதிலும் துன்பங்கள் கடவுளினால் நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான் அனுமதிக்கப்படுகின்றன என்பதில் ஒற்றுமைப்படுகின்றன.

**தீமைகளும் துன்பங்களும்: சமயம் தரும் விளக்கங்கள்**

இறைவனின் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் மர்மமானவை; மனிதர்களால் எதனையும் புரிந்து கொள்ள முடியாதவை. வெளிப்படையாக நோக்குமிடத்து துன்பங்கள் கேடு விளைவிக்கும் செயற்பாடுகளாக கொள்ளப்பட்டாலும், துன்பங்கள் கேடு விளைவிக்கும் நோக்கில் உண்டாக்கப்படுவதில்லை. இத்தகைய துன்பத்திற்கு காரணமாக இறைவனின் நல்ல நோக்கமும் ஒளிந்து காணப்படும். செமட்டிக் சமயங்களும் மற்றும் பார்சி சமயமும் துன்பங்களுக்கு சாத்தான் (Devil) மற்றும் கெட்ட ஆவிகளே (Evil spirits) காரணம் என விளக்குகின்றன. தீமைகளுக்கான காரணம் அஹ்ரமின் (Ahriman) என சொராட்டியரிய சமயமும, சாத்தான் (Sathan) என ஜுடேயிஸம்(Judaism) மற்றும் கிறிஸ்தவ சமயமும், இப்லீஸ(Iblis) என இஸ்லாமும் கூறுகின்றன (திவாரி, 2014).

எனினும் எச்சமயமும் கெட்ட சக்தி சுதந்திரமாக செயல்படக்கூடியது. கடவுளின் கட்டுப்பாட்டை மீறியது எனக் கூறவில்லை. கடவுளின் கட்டுப்பாட்டிலேயே அனைத்து கெட்ட சக்திகளும் தொழிற்படுவதால் தீமைக்கு கடவுளே

பொறுப்பு எனும் கருத்து இதன் மூலம் பெறப்படுகின்றது. இக்கருத்துக்கான விளக்கங்களையும் நியாயங்களையும் சமயங்கள் வேறுபட்ட விதத்தில் விளக்குகின்றன.

பாரசீக சமய உயர்களடவுளான அஹுரா மஸ்டா (Ahura Mazdah) இத்தகைய கெட்ட பிசாசுகளை நீதிக்குரிய தேவைக்காக மட்டுமே அனுமதித்துள்ளதாக குறிப்பிடுகின்றது. யூத சமயம் மற்றும் கிறிஸ்தவ சமயம் மேலே குறிப்பிட்ட கொள்கையினை கொண்டிருந்தாலும் வேறுபட்ட கருத்துக்களையும் கொண்டுள்ளன. யூத சமயம் கேடு விளைவிக்கும் சாத்தான்கள் கடவுள் ஒருவரினால் மட்டுமே அறியப்பட்ட மர்மம் எனக் குறிப்பிடுகின்றது. யூதசமயம் எல்லாம் வல்ல இரக்கமுள்ள இறைவனே கேடு மற்றும் துன்பங்களை மனிதன் தன் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் அவனது உண்மை நிலையையும் சோதிப்பதற்காகவே ஏற்படுத்துகின்றான் எனக் கூறுகின்றது.

இச்சோதனையில் அனைத்துத் துன்பங்களையும் சகித்து கடவுள் மீது நம்பிக்கை கொள்ளும் மனிதர்களுக்கு கடவுள் அதிக நற்கூலிகளை வழங்குவதாக இச்சமயங்கள் கூறுகின்றன. எனவே தீங்குகள் மனிதனின் தார்மீக மற்றும் சமய வலிமையை பரீட்சிக்கும் அம்சமாகவே கொள்ளப்படுகின்றன. சீக்கிய சமயமும் (Sikinism) இத்தகைய நம்பிக்கையை கொண்டுள்ளது. துன்பங்கள் கடவுளின் பரிசுகளாக இருப்பதனால் அதனை பயபத்தியுடன் ஏற்றுக் கொள்ளும்படி சீக்கியம் ஏவுகின்றது. இத்தகைய துன்பங்களை கடவுள் ஏற்படுத்துவதன் நோக்கம் மனிதனை நல்வழிப்படுத்துவதற்காகவே என சீக்கியம் மேலும் கூறுகின்றது.

துன்பங்களில் சிக்கித் தவிக்கும் மனிதனானவன் கெட்ட செயற்பாடுகளை தவிர்த்து நற்செயல்கள் புரிய தன்னை தயார்படுத்திக் கொள்கின்றான் என சீக்கிய சமயம் கூறுகின்றது. யூத மற்றும் கிறிஸ்தவ சமயங்களும் பாவத்திலிருந்து மீண்டுவருதல் எனும் கருத்தின் மூலம் இதே கருத்தை விளக்குகின்றன. கிறிஸ்தவ சமயத்தின் தந்தைக் கடவுளானவர் தனது பிள்ளைகளை நல்வழிப்படுத்த துன்பங்கள் எனும் தடியை உபயோகிக்கின்றார் எனக் கூறுகின்றது. இஸ்லாமிய சமயமும் யூத சமயமும் தவறிழைக்கும் மனிதர்களுக்கு தண்டனையாக துன்பங்களும், தீமைகளும் ஏற்படுவதாக குறிப்பிடுகின்றன.

ஆனால் எப்பாவமும் செய்யாத அப்பாவிகள் துன்பத்தில் உழல்வதும், பாவம் செய்தவர்கள் சந்தோசமாக வாழ்க்கையைக் கொண்டு செல்வதும் பல பொழுதுகளில் நிகழ்கின்றன. இந்நிலை கடவுளின் நீதி தொடர்பில் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன. யூத மற்றும் கிறிஸ்தவ சமயங்கள் ஒரே பாரம்பரியத்தில் தோற்றம் பெற்றவை என்பதனால் கேடு மற்றும் தீங்கு தொடர்பான விளக்கங்கள் இரு சமயங்களிலும் ஒத்ததாகவே காணப்படுகின்றன. துன்பங்களின் மூலம் மனிதர்களின் குணாதிசியங்கள் சீர்திருத்தப்படுகின்றன என்பதோடு, தீய ஆவிகளின் செல்வாக்கினை நல்லதாகவே இரு சமயங்களும் கருதுகின்றன. தீங்குகள் மற்றும் கேடுகள் நற்கருமங்கள் கிடைக்கப் பெறுவதற்கான சமிஞ்சை எனவும் அதற்காக துன்பங்களை பொறுமையாக சகித்துக் கொள்ளும்படியும் இச்சமயங்கள் பணிக்கின்றன.

யூதர்கள் துன்பத்தில் மாட்டிக்கொண்டு பொறுமையாக இருந்த காலமெல்லாம் அவர்களுக்கு நலவின் கதவுகள் நிறையவே திறக்கப்பட்ட வரலாற்றினை யூத சமய நூல்கள் குறித்துக்காட்டுகின்றன. அதேபோல் இயேசு சிலுவையில் அறையப்பட்ட சம்பவமும் அவரது மீள்வருகையும் துன்பம் மூலம் நலவாழ்வு பிறக்கின்றது என்பதனை விளக்குகின்றது என கிறிஸ்தவ சமயம் சுட்டிக்காட்டுகின்றது.

யூத சமயம், கிறிஸ்தவ சமயம் மற்றும் பார்சி சமயம் போன்றவை தீமையின் நீதி (moral value of evil) பற்றிப் பேசுகின்றன. மனிதர்கள் மத்தியில் நீதியினை மேலும் வலுப்படுத்த, மக்கள் தமது தெரிவுச் சுதந்திரத்தை பிரயோகித்துப் பார்க்க துன்பங்களை கடவுள் அனுமதித்தாக இச்சமயங்கள் கூறுகின்றன. இவ் உலகில் நல்லவை மாத்திரம் காணப்பட்டால் நீதியை நிலை நாட்டுவதற்குரிய எந்தவொரு முயற்சியும் மனிதனால் முன்னெடுக்கப்பட்டிருக்க முடியாமல் போயிருக்கும் எனவும் இச்சமயங்கள் மேலும் குறிப்பிடுகின்றன.

இந்திய மரபில் தோற்றம் பெற்ற சமயங்கள் துன்பங்கள் தொடர்பாக நடைமுறை ரீதியான அணுகுமுறையினைக் கொண்டுள்ளன. துன்பங்கள் மற்றும் கேடுகளை காரணிகளாக கருதி இக் காரணிகளை இல்லாதொழிக்கும் வழிமுறைகளை அடையாளப்படுத்துகின்றன. மேலும் மனிதர்களை துன்பங்களிலிருந்து காப்பதற்கு அவை முயலுகின்றன. எவ்வாறாயினும் இந்திய மரபில் உருவான சமயங்கள் துன்பங்கள் உருவாகுவதற்கான

வழிவகைகளை (causes) குறிப்பிட்டு கூறுகின்றதே தவிர அதற்கான காரணங்களை (reasons) முன்வைக்கவில்லை. துன்பங்கள் மனிதனை தொடர்வதற்கு அவர்களது கடந்த கால முன்வினைப்பயன் அதாவது கர்மாவே (karma) காரணம் என்று கூறுகின்றன. துன்பங்களுக்கு காரணமாக அமையும் ஹாமாய் (Haumai) பற்றி சீக்கிய சமயம் சொல்லும் கருத்து முன்வினைப்பயன் பற்றிய கருத்தை ஒத்ததாகவே அமைகின்றது. ஹாமாய் எனப்படும் அகங்காரம் (Egoism) ஐந்து தீமைகளுக்கு (காமம், பேராசை, கோபம், பெருமை, உடனிணைப்பு) காரணமாய் அமைந்து மறு பிறப்பைத் தோற்றுவிக்கின்றது. ஹாமாய்க்கு நேர்மாறானது பணிவு (Humility) ஆகும். பௌத்த சமயம் மற்றும் சமண சமயம் (Jainism) போன்றவை கடவுள் மீது நம்பிக்கை கொள்வதில்லை என்பதனால் கடவுளே துன்பங்களுக்கு காரணமானவர் எனும் கருத்தை கொண்டிருக்கவில்லை.

பல தெய்வக் கோட்பாட்டினைக் கொண்ட இந்து சமயமும் துன்பங்களுக்கு கடவுளே பொறுப்பதிகாரி எனும் கருத்தை குறிப்பிடவில்லை. அறியாமையும், (Ignorance) முன்வினைப் பயனுமே மனிதனின் துன்பங்களுக்கு காரணம் என கூறுகின்றது. கடவுள் கர்மா எனும் சட்டத்தை மீறுவதற்கு விரும்புவதில்லை. கர்மாவை இயல்பாக தொழிற்படும்படி விட்டு வைத்துள்ளார். சீக்கியம் சமயமானது கடவுளே கேடுகளுக்கு பொறுப்பு என நேரடியாக கூறுகின்றது. இருந்த போதிலும் அத்தகைய கேடுகளை கடவுளின் பரிசாகவும் பார்க்கின்றது.

இந்து சமயத்திற்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் கேடு மற்றும் துன்பம் தொடர்பான கருத்துக்களில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. மனிதனின் அறியாமை காரணமாக அவன் மீள்பிறப்பெடுத்து துன்பத்தில் உழல்வதாக இந்து சமயம் குறிப்பிடுகின்றது. அதே போல் ஆதாம், ஏவாள் செய்த மூல பாவத்தின் (Original sin) விளைவாகவே மனிதன் பிறந்து துன்பப்படுவதாக கிறிஸ்தவ சமயம் சுட்டிக் காட்டுகின்றது. இரு சமயங்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது மனிதன் துன்பத்தில் உழல்வதற்கு அவனே காரணம் என காட்டப்பட்டாலும், உண்மையில் கடவுளே துன்பங்களிற்கு பொறுப்புதாரி ஆகிறார் எனும் கருத்து பரவலாக உள்ளது. மனிதன் பூமியில் பிறக்கும் போது அறியாமையுடனே பிறக்கின்றான். அவனது அறியாமைக்கு கடவுளே பொறுப்பு என்பதே இதற்கான காரணமாகும்.

அதேபோன்று ஆதாம் செய்த பாவத்திற்கு காரணம் கடவுள் அவருக்கு வழங்கிய சுதந்திரமே (Freedom to will) என்பதால் இச்சுதந்திரத்தை வழங்கிய கடவுளே இப்பாவத்திற்கு சூத்திரதாரியாக் காணப்படுகின்றார். கடவுள் எங்கும் உள்ளவர். அனைத்தும் அறிந்தவர். ஆதாமிற்கு சுதந்திரம் வழங்கினால் பாவச் செயலில் அவர் ஈடுபடக் கூடும் என அறிந்தும் சுதந்திரத்தை வழங்கியுள்ளார். மேலும் ஆதாமின் வழித்தோன்றல்கள் ஆதாம் செய்த குற்றத்திற்கு பொறுப்புதாரியாகவும் முடியாது. எனவே இது மனிதனுடைய நேரடியான பிழை அல்ல. இது கடவுளின் ஏற்பாடு. கடவுளே பாவத்தை ஆதாமுடன் இணைத்து வைத்துள்ளார். ஆகவே இரு சமயங்களிலும் (இந்து மற்றும் கிறிஸ்தவம்) மனிதன் துன்பத்தில் உழல்வதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ கடவுளே பொறுப்புதாரி எனக் கூறப்படுகின்றது. இருப்பினும் ஒரு முக்கியமான வித்தியாசமும் இவ்விரு சமயக்கொள்கையில் காணப்படுகின்றது.

இந்து சமயத்தில் மனிதனின் குறைந்த அறிவே துன்பப்பத்திற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. கிறிஸ்தவ சமயத்தில் இதற்கு மாற்றமாக மனிதன் பெற்றுள்ள போதிய அறிவின் காரணமாகவே துன்பத்தில் வீழ்கின்றான் என கூறப்பட்டுள்ளது. ஆதாம், ஏதேன் தோட்டத்திலுள்ள கனியினைப் பற்றி நன்கு தெரிந்திருந்தும் அதனை சாப்பிட்டு பாவத்தைத் தேடிக்கொண்டதன் விளைவாகவே அவரும் அவரது பரம்பரையும் துன்பப்படுகின்றனர். இருந்தபோதும் கிறிஸ்தவ சமயம் அறிவாற்றலைத் துன்பத்திற்கான முழுமையான காரணமாகக் கருதவில்லை. ஆதாம் தடுக்கப்பட்ட கனி என்று தெரிந்த போதும் கடவுளின் விருப்பத்தை மீறியே அக்கனியை உண்டார். இதில் அறிவாற்றலைவிட கடவுளின் விருப்பத்திற்கு மாறு செய்ததே பெரும் குற்றமாகும். இத்தகைய கீழ்ப்படியாமையினாலேயே மனிதன் துன்பங்களை அனுபவித்ததாகவும் அதுவே துன்பங்களுக்கு காரணம் எனவும் கூறுப்படுகின்றது.

புராதன இந்துசமயத்தில் (வேத இந்துமதம்) கேடு மற்றும் துன்பங்கள் மனிதரிடையே நிலவுவதற்கு கெட்ட பிசாசுகளே (அசுராஸ்) காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடவுள் அல்லது கடவுள்களின் கோபத்திற்கும் சாபத்திற்கும் உள்ளாவதனால் துன்பங்கள் ஏற்படுவதாக சில வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்காக மதச் சடங்குகள், யாகங்கள் செய்யப்பட்டு கடவுளைத் திருப்திப்படுத்தும் செயற்பாடுகள் அக்காலத்தில் இடம்பெற்றன. தற்பொழுதும் கூட ஒரு சாதாரண இந்து சமயச் சார்புடைய விசுவாசி சந்தோசமோ துன்பமோ ஏற்படுவதற்கு சில கடவுளர்களின் திருப்தியும் திருப்தியின்மையுமே காரணம் என நம்புகின்றான்.

இஸ்லாம் எல்லாத் தீமைகளையும் இருவகையாக பிரித்துப் பார்க்கின்றது.

01. மனிதன் செய்பவை
02. மனித சுதந்திரத்தை மீறி நடப்பவை

முதல் வகை தீமைகளுக்கான காரணமாக மனிதனே காணப்படுவதாக இஸ்லாம் கூறுகின்றது. இறைவனின் வரையறைகளும் சட்டங்களும் மீறப்படுகின்ற போது இவ்வகைத் தீமைகள் தோற்றம் பெறுகின்றன. கொலை,கொள்ளை,விபச்சாரம், களவு, நாச வேலை போன்றவற்றை இதற்கு உதாரணங்களாகும்.

மனிதர்கள் தமது செயல்களினால் தீமைகளை ஏற்படுத்துகின்றார்கள். நன்மைகள் அனைத்தும் அல்லாவினாலேயே ஏற்படுத்தப்படுகின்றன என்பது அல்குர்ஆனின் கருத்தாகும்.

'உனக்கு யாதொரு நன்மை ஏற்பட்டால் (அது) அல்லாஹ்வினால் ஏற்பட்டது. உனக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டால் (அது நீ இழைத்த குற்றத்தின் காரணமாக) உன்னால்தான் வந்தது (அல்குரான் (4:79). அதே போல் உங்கள் கரங்கள் தேடிக் கொண்ட (தீவினையின் காரணமாகவேதான் உங்களை தீமைகள் வந்தடைகின்றன (அல்குரான் 42:30).

எனவே நன்மைகள் அல்லாவைச் சார்ந்தவை. தீமைகள் மனிதர்கள் தமது கரங்களால் தேடிக் கொண்ட தீவினையின் விளைவுகள் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

மனிதனுக்கு அப்பாற்பட்ட தீமைகளைப் பொறுத்தவரை அவை முற்றிலும் அல்லாவின் நாட்டத்தோடும் திட்டத்தோடும் தொடர்பானவை. வெள்ளம், வரட்சி, புவி நடுக்கம், சுனாமி போன்றவை இவற்றுக்கு உதாரணங்களாகும். வெளிப்படையாக இவை தீமைகளாக தொரிந்தாலும் நன்மைகளே அதிகம் இவற்றுள் மறைந்திருக்கும். அளவுக்கு மீறிய மழை தீமையை விளைவிக்க முடியும். எனினும் இத்தகைய மழையை மனிதர்களுக்கான படிப்பினையாக மற்றும் சோதனையாக கொள்ளவும் முடியும். அதே போல் சிலருக்கு அவர்கள் செய்த குற்றங்களுக்கான பரிகாரமாகவும் அமைய முடியும் (அய்யூப் அலி,1992). தீமைகள் மனிதனின் தீய செயல்களுக்கான தண்டனையாக அல்லது சோதனையாக அல்லது மனிதனுக்கான பயிற்சியாக அமைந்து விடுகின்றன என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

**முடிவுரை**

தீமைகளும் துன்பங்களும் ஏன் தோற்றம் பெறுகின்றன என்பதனை செமட்டிய சமயங்களும் இந்திய மரபில் தோற்றம் பெற்ற சமயங்களும் வேறுபட்ட கோணத்தில் விபரிக்கின்றன. துன்பங்கள் மற்றும் தீமைகள் மூலம் கடவுள் மனித சமூகத்திற்கு நலவினை செய்ய நாடுகின்றார் என செமட்டிய சமயங்களும், கர்மா காரணமாகவே துன்பங்கள் ஏற்படுவதாக இந்திய எல்லைக்குள் தோற்றம் பெற்ற சமயங்களும் விளக்கங்களை வழங்குகின்றன.

**உசாத்துணை நூல்கள்**


1. ma;A+g;> v];.vk;. (2013). *r%ftpay; mbg;gil vz;zf;fUf;fs;.* xYtpy;: r%f tpQ;Qhdq;fs; Jiw> ,yq;if njd;fpof;Fg; gy;fiyf;fofk;.
2. அய்யூப் அலி ,சி (1992) அல்லாஹ் தீமைகளை உண்டுபண்ணுகின்றானா அல்லது மனிதன் தேடிக் கொள்கின்றானா? இஸ்லாமிய சிந்தனை 14 (3) PP18-24)
3. Cohen, Robin & Kennedy, Paul, (2000). *Global Sociology.* London: Mac Millan.
4. Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.
5. Haralambos M, and Heald R.M., (2004). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.

6. Landis, Paul H., (1990). *Sociology: An Introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
7. Rao Sankar, (2002). *Sociology*: *Primary Principles.* New Delhi: S.Chand and Commpany Ltd.
8. Tiwari, T.N.,(2014). Comparative Religion. Delhi: Motilal Banarsidas Publishers Private Ltd.